# சுற்றறிக்கை

(நகல்) ந.க.எண்.2463/ஆ2/2024

பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் கடிதத்தின் படி 2024–2025ஆம் ஆண்டு கல்வி ஆண்டில் அரசு/அரசு உதவி பெறும்/மெட்ரிக்/சுயநிதி பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் U 19 வயது பிரிவில் உள்ள மாணவ/மாணவியர்களுக்கு மாநில அளவில் பாரதியார் தின குழு விளையாட்டுப் போட்டிகள் (BDG) 05.12.2024 முதல் 10.12.2024 வரை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

| தேதி | நடைபெறும் இடம் |
|---|---|
| 05.12.2024 முதல் 07.12.2024 வரை (பெண்கள்) | தொட்டியம், கொங்குநாடு பொறியியல் கல்லூரி, திருச்சி. |
| 08.12.2024 முதல் 10.12.2024 வரை (ஆண்கள்) | |
| மாணாக்கர்கள் தங்கும் இடம் | தொட்டியம், கொங்குநாடு பொறியியல் கல்லூரி |

எனவே இணைப்பில் உள்ள மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்து போட்டியில் உரிய நேரத்தில் எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் பங்கு பெறச் செய்ய உடற்கல்வி ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி தாளாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.மேலும் இப்போட்டியில் நடுவர்களாக பங்கு கொள்ளவிருக்கும் இணைப்பில் உள்ள வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த உடற்கல்வி ஆசிரியர்களை பணி விடுவிப்பு செய்யுமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

<u>குறிப்பு:</u> மாநில அளவிலான 19 வயதிற்குட்பட்ட பாரதியார் தின குழு விளையாட்டுப் போட்டிகள் கைப்பந்து (HANDBALL) மற்றும் கபாடி (KABADDI) நடைபெறும் தேதி மற்றும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

இணைப்பு:

1. போட்டியில் பங்குபெறும் மாணவ மாணவியரின் பட்டியல்
2. அணி மேலாளர்களுக்கான வழிமுறைகள்.
3. Fixtures–2.

/ஒப்பம்/

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்

அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்/
தனியார் பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர்.
   (இடைநிலைக் கல்வி /தனியார் பள்ளிகள்)
2. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர், வேலூர் மாவட்டம்.
   தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.
3. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், சென்னை.
   தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.